# அஷ்ட பைரவர்

– தர்ஷண் சக்திவேல்



சிவபெருமானின் தத்புருஷ முகத்திலிருந்து தோன்றியவர் பைரவர் என்பர். இவர் பிரமனின் ஐந்தாவது தலையைத் துண்டித்தவராவர். சிவபெருமானின் 64 வடிவங்களுள் பைரவ மூர்த்தமும் ஒன்றாகும். அஷ்டமி வழிபாடு பைரவருக்கு உகந்ததாகும். காலையில் வழிபாடு துவங்குவதற்கு முன்னரும், இரவில் வழிபாடு நிறைவுக்குப் பின்னரும் பூட்டிய திருக்கோயில் சாவியினை பைரவர் சன்னதியில் வைத்து எடுப்பது திருக்கோயில் மரபு. ஆலயத்தின் காவலராக இருப்பதால் இவரை க்ஷேத்திர பாலகர் என்றும் வழங்குவர். கார்த்திகை மாதம் தேய்பிறை அஷ்டமி பைரவாஷ்டமியாகக் கொண்டாடப்படுகிறது.

பைரவருக்கு உகந்தது தயிர் அன்னம், தேங்காய் போன்ற வெண்ணிற உணவுகளாகும். எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுபட பைரவ வழிபாடு சிறந்தது என்பர். இவர் எட்டுக் கோலங்களில் நின்று அஷ்ட பைரவர்களாகவும், சில திருக்கோயில்களில் அருள்பாலிக்கின்றார். நாயை வாகனமாகவும், சண்டிகாவை தேவியாகவும் கொண்டுள்ளார்.

சங்கார பைரவர், சண்ட பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், அசிதாங்க பைரவர், குரு பைரவர், பீஷண பைரவர், குரோதன பைரவர் என்பன அஷ்ட பைரவ மூர்த்தங்களாகும். காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் பகுதியில் உள்ள சோளீஸ்வரர் கோயிலில் அஷ்ட பைரவர்களும் லிங்க ரூபத்தில் தனித்தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளது அத்தலத்திற்குரிய சிறப்பாகும். அஷ்ட பைரவ தலமாக அந்தத் தலம் திகழ்கின்றது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகில் உள்ளது ஆறகழூர் காமநாதீஸ்வரர் திருக்கோயில். இந்தத் தலத்திலும் அஷ்ட பைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். பைரவரைத் தேய்பிறை அஷ்டமி அன்று முறையாக வழிபட்டு வந்தால், துன்பங்கள் நீங்கி வாழ்வில் வசந்தங்கள் வந்து சேரும் என்பது வழக்கு.